**வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்**

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

# வெற்றிடங்கள்

வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் உள்ள பின்வரும் பதவிகளை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. சாரதி**

**02. வீடியோ பதிவாளர்**

## 01. சாரதி - 01 பதவி

**தொழில் விபரம்**

- பல்கலைக்கழகத்தின் வாகனங்களைச் செலுத்துதல்
- செலுத்துவதற்காக பயன்படுத்தப்படும் எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் தொடர்பான லொக் குறிப்புப் புத்தகமொன்றைப் (ஓட்டக் குறிப்புப் புத்தகம்) பேணுதல்
- பல்கலைக்கழகத்திற்குத் தேவையான வகையில் விடுமுறை நாட்களில் சேவை வழங்குதல்
- திணைக்களத் தலைவரினால் ஒப்படைக்கப்படும் வகையில் பல்கலைக்கழக வாகனங்களை எப்போதும் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்
- தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்களின் வருடாந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய வேளையில் காப்புறுதிகளை மேற்கொள்ளுதல்
- வாகனத்தின் செயற்பாட்டுத் தன்மைக்கு தாக்கம் செலுத்தும் கோளாறுகள் தொடர்பில் திணைக்களத்தின் தலைவருக்கு அறிக்கையிடல்
- சிறு விபத்துக்களுக்காகவேனும் திணைக்களத் தலைவரினால் வழங்கப்படும் வழிகாட்டல்களை பின்பற்றுதல்
- வாகனம் செலுத்தாத வேளையில் நிறுவனத்தின் கடமைகளுக்கு உதவுதல்
- திணைக்களத் தலைவர், பணிப்பாளர் நாயகம் அல்லது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரினால் ஒப்படைக்கப்படும் வேறு எந்தவொரு கடமைகளையும் நிறைவேற்றுதல்

**தகைமைகள்:**

- **வெளிவாரி**
  - **கல்வி :** க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றி குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
  - **தொழில் சார்ந்தவை:** கனரக வாகனம் செலுத்துவதற்காக செல்லுபடியாகும் உரிமம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கனரக வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம்.
- **உள்வாரி:** க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றி குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கனரக வாகனம் செலுத்துவதற்காக செல்லுபடியாகும் உரிமம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கனரக வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம் உள்ள ஆரம்ப தரம் - தேர்ச்சியற்ற / ஆரம்ப தரம் - அரைத் தேர்ச்சி ஊழியர்.

## 02. வீடியோ பதிவாளர் - 01 பதவி

**தொழில் விபரம்**

- கெமரா மற்றும் தொடர்புடைய ஏனைய உபகரணங்களின் உற்பத்திக்காக தயாரிக்கும்போது அதற்கான தயாரிப்பாளருக்கு உதவுதல்
- கெமரா மற்றும் தொடர்புடைய உபகரணங்களின் பொதுவான பராமரிப்பு நடவடிக்கைகளை அறிந்துகொள்ளுதல் மற்றும் முறையான வகையில் அவற்றின் உற்பத்திக்கு அறிக்கையிடுதல்
- தொடர்புடைய பிரிவு தலைவரினால் ஒப்படைக்கப்படும் மாணவர்களுக்காக நடாத்தப்படும் செயலமர்வுகளுக்கு உதவுதல்.
- இதற்குப் புறம்பாக பிரிவுத் தலைவர், பணிப்பாளர் நாயகம் அல்லது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரினால் ஒப்படைக்கப்படும் ஏனைய எந்தவொரு கடமைகளையும் நிறைவேற்றுதல்
- **வெளிவாரி**
  - **கல்வி:** க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றி குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
  - **தொழில் சார்ந்தவை:** அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் குறித்த துறையில் தேசிய தொழிற்றிறன் (NVQ) 4ஆம் நிலைக்குக் குறையாத சான்றிதழ் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.
- **உள்வாரி:** க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றி மற்றும் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அரச தொழில்நுட்பக் கல்லூரியினால் நடாத்தப்படும் இயைபுடைய தொழில்சார் பரீட்சையில் (வுசயனந வுநளவ) சித்தியடைந்துள்ள ஆரம்ப தரம் - தேர்ச்சியற்ற / ஆரம்ப தரம் - அரைத் தேர்ச்சி வகுதியின் ஊழியர்கள்.

**நியமனத்தின் தன்மை**

- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய உரிமையுடன் நிரந்தரமானது.

**வயது:**

- 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**

- U-PL 3 - 2025: 48,005 – 10x490 – 10x540 – 10x640 – 72,985.00 மாதாந்தம்.

  (2025-03-25ஆம் திகதிய 06/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் விதிகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு நடைமுறை:**

- செயல்முறை தொழில்சார் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலமாக மேற்கொள்ளப்படும்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,**

i. இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும்.

ii. பதவிக்கான கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்

iii. சிறந்த நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும்

➢ ***விண்ணப்பப் படிவத்தை பல்கலைக்கழகத்தின் www.uovt.ac.lk எனும் இணையதளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.***

**பொதுவான அறிவுறுத்தல்கள்**

- இந்தப் பதவிகள் இடமாற்றத்திற்கு உட்பட்டவை அல்ல.
- ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- குறித்த விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.
- யாராவது விண்ணப்பதாரர் ஒருவர் இந்தப் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் தற்போது பணிபுரியும் நிறுவனத்தின் தலைவரினால் பணியிலிருந்து விடுவிக்கப்பட முடியும் என்பதைக் குறிக்கும் ஒரு கடிதம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் இட்டு உப வேந்தர், வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இல.100, கந்தவளை, இரத்மலானை என முகவரியிடப்பட்டு 2026 ஜூலை 21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது உபவேந்தர் அலுவலகத்திற்கு நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.
- முழுமையற்றதாக சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
- ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் குறும் பட்டியலிடப்பட்ட வேட்பாளர்கள் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.
- தேர்வுச் செயல்பாட்டில் தேவையற்ற செல்வாக்கை செலுத்தும் எந்தவொரு முயற்சியும் விண்ணப்பதாரர் தகுதி நீக்கம் செய்யப்படுவதற்கு வழிவகுக்கும்.
- தமிழ் மொழி விளம்பரத்தில் உள்ள எந்தவொரு சிக்கல் / தெளிவின்மை வேளைகளில் போது முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழியில் உள்ள ஆட்சேர்ப்பு நடைமுறை மேலோங்கி நிற்கும்.

**உப வேந்தர்,**
**வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல்**
**பல்கலைக்கழகம்,**
**இல. 100, கந்தவளை,**
**இரத்மலானை.**

**தொலைபேசி: 0112-630 704**
**இணையதளம்: www.uovt.ac.lk**
**2026 ஜூன் 21ஆம் திகதி**